# மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடு கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் (கல்குடா கல்வி வலய 1AB பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**Mrs. Thakshaayini Rajandran**
Department of Education and Child Care
Eastern University of Sri Lanka
thakshaa8184@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மாணவர்களிடத்தே மனவெழுச்சியானது திறன்களையும் ஆற்றல்களையும் எதிர்வு கூறுவதற்கும் நிர்ணயம் செய்வதற்கும் சிறப்பான வழியாக அமைகின்றது. வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதும், இசைவானதாகவும் ஆக்கிக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இது உதவுகிறது. பிறரது உணர்வுகளை சரியாகவும் தவறாகவும் விளக்கிக்கொள்வதற்கும் மனவெழுச்சி துணைபுரிகிறது. தவறான மனவெழுச்சிகளை புரிந்து கொள்ளல் தவறான நடத்தைகளுக்கு இட்டுச்செல்லும் அனைத்து மனவெழுச்சிகளிலும் உள்ளமைந்து காணப்படும் நேர்பண்புகளை விளங்கிக்கொள்ளல் கற்றலுக்கு உறுதுணையாக அமைகின்றது. மனவெழுச்சிகளை முகாமை செய்யும் திறன்கள் கற்றலுடன் ஒன்றிணைக்கும் போது வினையாற்றல் மேலோங்கும். மாணவர்கள் வெளிப்படுத்தும் மனவெழுச்சிகளை ஒழுக்க வளர்ச்சியின் ஊடாக சிறப்பாக கட்டுப்படுத்த முடியும். ஒழுக்க வளர்ச்சி, மனவெழுச்சி ஏற்படும் போது கட்டுப்படுத்தும் வழிமுறைகள் எவை என கற்றுக்கொடுக்கின்றது. இல்லையேல் மாணவன் சிறப்பான கற்றலை மேற்கொள்ள முடியாமல் போகும் போது கல்வி உளவியலை ஒரு ஆசிரியர் சிறப்பாக கற்றிருப்பாராயின் மாணவன் எச்சந்தர்ப்பத்தில் மனவெழுச்சிப் பண்புகளை வெளிப்படுத்துகின்றான் என அறிந்து சிறப்பான கற்பித்தலை மேற்கொள்ள முடியும். மாணவர்களின் அதிகளவான உடல், உள, மனவெழுச்சி வளர்ச்சியானது இந்தக் கட்டிளமைப்பருவத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. மாணவர்கள் இப்பருவத்தின் சிக்கலான மனவெழுச்சிப் பண்புகளை வெளிக்காட்டுவதற்கு சமூகக் கட்டுப்பாடு, சமயக் கட்டுப்பாடு என்பன தடையாக அமைகின்றது. இதனை எதிர்க்க முயலும் போது தாம் வேறு விதமான உள முரண்பாட்டிற்கு ஆளாகின்றனர். இதனை இனம் கண்டு நிவர்த்தி செய்யாவிடின் மாணவர்கள் பிற்காலத்தில் நடத்தைப்பிறழ்வு கொண்டவர்களாக மாறக்கூடும். இதனால் கற்றலானது பாதிப்படைகிறது. மனவெழுச்சியினை கட்டுப்படுத்தி வழிப்படுத்த வேண்டியது ஆசிரியரின் கற்பித்தல் நுட்பமாகும் என்பதை எடுத்தியம்புவதாக மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடு கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் எனும் இவ்வாய்வு கல்குடா கல்வி வலய பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களிலுள்ள மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு ஒரு விபரண ஆய்வாகவும் மாதிரிகள் எழுமாற்று அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு பொருத்தமான தரவு சேகரித்தற் கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு பெறப்பட்ட முடிவுகள் முழுப்பாடசாலைகளுக்கும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளன.

***பிரதான சொற்பதங்கள்:*** *மனவெழுச்சி, கட்டிளமைப்பருவம், நடத்தைப்பிறழ்வு*

## 1.1 ஆய்வு அறிமுகம்.

பொதுவாக மனவெழுச்சி என்பதன் அர்த்தம் 'வெளிப்படுத்து' அவாவைத்தூண்டு என்பதாகும். மனவெழுச்சியானது உயிரியை எழுச்சியுறச் செய்து செயல்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கின்ற ஓர் உயிருள்ள செயற்பாடு எனலாம். இவ்விதத்தில் ஒரு தனியாளின் நடத்தைகளுக்கு ஊக்குவிப்பது மனவெழுச்சியே ஆகும்.

வேறுவிதமாகக் கூறின் மனித நடத்தையின் ஊக்கி மனவெழுச்சியாகும். மனவெழுச்சிகள் ஏதாவது ஒரு தூண்டல் காரணமாக ஏற்படும் ஒருவருடைய பிரதிபலிப்புக்கள் என்று அறிமுகப்படுத்தலாம். அதாவது ஒருவருடைய மனதில் ஏற்படும் உள்ளார்ந்த உணர்வுகளே மனவெழுச்சி. மனவெழுச்சி என்பது உணர்ச்சி என்பதிலும் வேறுபாடானது. இவை தூண்டல்களால் தூண்டப்படும் மனநிலையாகும்.

ஒருவரிடத்தே குழந்தைப் பருவம் முதல் முதிர் பருவம் வரை மனவெழுச்சிகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவை எதிரானவையாகவும் நேரானவையாகவும் காணப்படும். மனித வளர்ச்சி பருவங்களுள் கூடுதலான மனவெழுச்சிச் சிக்கல்கள் ஏற்படும் பருவமாக கட்டிளமைப்பருவம் காணப்படுகின்றது.
பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் காணப்படும் மாணவர்கள் கட்டிளமைப்பருவத்தினர் ஆவர். இவர்களிடத்தே கூடுதலான மனவெழுச்சி பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக ஆளுமைச் சிக்கல்கள் ஏற்படுவதுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகின்றது. எனவே தான் மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் கற்றலில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை வெளிப்படுத்துவதற்காக கல்குடா கல்வி வலயத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.2 ஆய்வுப் பிரச்சினைகள்

மாணவர்களிடத்தே மனவெழுச்சியானது திறன்களையும் ஆற்றல்களையும் எதிர்வு கூறுவதற்கும் நிர்ணயம் செய்வதற்கும் சிறப்பான வழியாக அமைகின்றது. வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதும், இசைவானதாகவும் ஆக்கிக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இது உதவுகிறது. பிறரது உணர்வுகளை சரியாகவும் தவறாகவும் விளக்கிக்கொள்வதற்கும் மனவெழுச்சி துணைபுரிகிறது. தவறான மனவெழுச்சிகளை புரிந்து கொள்ளல் தவறான நடத்தைகளுக்கு இட்டுச்செல்லும் அனைத்து மனவெழுச்சிகளிலும் உள்ளமைந்து காணப்படும் நேர்பண்புகளை விளங்கிக்கொள்ளல் கற்றலுக்கு உறுதுணையாக அமைகின்றது. மனவெழுச்சிகளை முகாமை செய்யும் திறன்கள் கற்றலுடன் ஒன்றிணைக்கும் போது வினையாற்றல் மேலோங்கும். மனவெழுச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கும், நெறிப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும் அழகியற் கல்வி மிக்க பயனுள்ளதாக அமைதல் ஆய்வுகளின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது.

உதாரணமாக சமுகத்தில் முன்னேற்றம் பெறல் என்ற ஒரு மாணவனின் நேர்விசையுடன், அவற்றை மறுக்கும் அல்லது அவற்றைக் கெடுக்கும் எதிர் விசைகள் சங்கமிக்கும் பொழுது தனிச்சொத்துரிமையின் உந்தல், பொறாமை என்ற மனவெழுச்சியைத் தோற்றுவிக்கின்றது. நேர் எதிர்விசைகளின் அண்ணளவான அதிகரிப்பானது பண்பளவு மாற்றங்களை வருவிக்கின்றது. இந்த மாற்றம் குறிப்பிட்ட ஒரு நிலையில் மீப்பாய்ச்சலாக (Leap) மாறித் திடீர் உடைப்பெடுத்த மனவெழுச்சி கொப்பளிப்பாக வெளிவருகின்றது. நேர் மற்றும் எதிர் விசைகளின் தெறிவுக்கேற்பவே மனவெழுச்சியானது மாணவர்களிடம் இருந்து வெளிப்படுகின்றது. எனவே ஆசிரியர் இதனைக் கருத்திற் கொண்டே வகுப்பறையில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் வெளிப்படுத்தும் மனவெழுச்சிகளை ஒழுக்க வளர்ச்சியின் ஊடாக சிறப்பாக கட்டுப்படுத்த முடியும். ஒழுக்க வளர்ச்சி, மனவெழுச்சி ஏற்படும் போது கட்டுப்படுத்தும் வழிமுறைகள் எவை என கற்றுக்கொடுக்கின்றது. எனவே கல்வித் துறைக்கு இவ்வாய்வு முக்கியமாக உணரப்படுகின்றது. இல்லையேல் மாணவன்

சிறப்பான கற்பித்தலை மேற்கொள்ள முடியாமல் போகும் போது கல்வி உளவியலை ஒரு ஆசிரியர் சிறப்பாக கற்றிருப்பாராயின் மாணவன் எச்சந்தர்ப்பத்தில் மனவெழுச்சிப் பண்புகளை வெளிப்படுத்துகின்றான் என அறிந்து சிறப்பான கற்பித்தல் ஊடாக கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.
மாணவர்கள் கற்றலில் இடர்படுவதற்கான காரணம் அவர்களின் தனியாள் வேறுபாடாகும். இந்த வேறுபாடானது ஒவ்வொருவரும் வெளிப்படுத்தும் மனவெழுச்சிப் பண்பிலே தங்கியுள்ளது. கட்டிளமைப் பருவத்தினரிடையே தான் அதிகளவுப் பிரச்சனைகள் காணப்படுகின்றது. இவர்கள் தமக்கும் சமூகத்திற்கும் தீமை விளைவிப்பவராக காணப்படுகின்றனர். பிழையான சீராக்கம் இடத்திற்கு இடம் காலத்திற்கு காலம் சமூக கலாச்சார வேறுபாட்டுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படல். இவர்களின் நடத்தை பற்றி ‘‘சிக்மன்புரைட்’’ கூறும் போது னைஇ அகம் அதியகம் என குறிப்பிட்டு அகத்தின் குறைவளர்ச்சி காரணமாக நெறிபிறழ்வான நடத்தை தோன்றுவதாக குறிப்பிடுகிறார்.

இந்த மனவெழுச்சியானது சாதகமற்ற குடும்ப உறவு, விருப்பத்திற்கெதிரான தடைகள், எதிர்பாலார் மீதான நாட்டம், சமயம் சார்ந்த தொழில், மனவெழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் விளக்குதல் வேண்டும். மனவெழுச்சிகளைப் போன்று உணர்ச்சிகள் தீவிரமானவை என்று கொள்ள முடியாது. மனசெழுச்சியானது திடீர் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தோன்றுகின்றன. ஆனால் மனவெழுச்சிகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உதாரணமாக மகிழ்ச்சியின் வெளிப்பாடாக சிரிப்பு ஏற்படுகிறது. துக்கம் விளைவிக்கும் தூண்டிக்குரிய புலக்காட்சியை ஒருவர் மேற்கொள்ளும் பொழுது உடலிலே நிகழும் மாற்றங்களால் மனவெழுச்சி எழுகின்றது. (ஜெயராசா, 2005)

மாணவர்கள் கட்டிளமைப்பருவத்தில் எதிர்பால் கவர்ச்சி, காதல்(Love), காமஉணர்ச்சி என்பன கூடுதலாக மாணவப்பருவத்தினை ஆட்டிப்படைக்கும் மனவெழுச்சி வெளிப்பாடுகளும் இந்த ஆசைகள் மாணவர்கள் அடைய எத்தனிப்பார்கள். இதன் போது இது அடையப்படாமல் இருப்பதால் மாணவர்கள் பிறழ்வான நடத்தைகள், போதைப்பொருளுக்கு அடிமையாதல், தற்கொலை முயற்சியினை மேற்கொள்ளுதல், கற்றலில் ஆர்வமின்றி இருத்தல், ஒரு சீரான நடத்தையினை பேணமுடியாமை, ஒதுங்கியிருத்தல், உள முரண்பாட்டிற்கு உட்படுதல் என்பன ஏற்படுகின்றது. இதன்போது முரட்டுத்தனம் உண்டாகின்றது. இதனால் மாணவர்கள் தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தாம் செய்வது முரணானதா அல்லது முரணற்றதா என அறியாமல் செய்கின்றனர். இது கற்றலில் தாக்கத்தினை ஏற்படுத்தும் காரணியாக அமைகின்றது.
பாடசாலை மாணவர்கள் கற்றல் கற்பித்தல் விடயங்களில் கூடுதலான கவனத்தை செலுத்தும் போது மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளை பருவத்திற்கு ஏற்ப ஆசிரியர் அறிந்து கற்பிக்க வேண்டும். இன்று நம் மாணவர்களின் கல்வி ஏன் பின்தங்கிக் காணப்படுகிறது. குறிப்பாக கட்டிளமைப்பருவம் அல்லது சிரேஷ்ட மாணவர் பருவம் 13-18 உலக மயமாக்கலுடன் சினிமாவின் ஆதிக்கம் இவைகளுக்கு உட்பட்டுக் காணப்படுகிறது. இதன் காரணமாக மாணவர்கள் தமது ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமல் போனால் இவ்வாறான தீய வழிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முயலுகின்றனர். ஏனெனில் இவ்வயதினை உடைய மாணவர்கள் தீமை, நல்ல வழிகளில் வளர்க்கக் கூடியது சில மாணவர்கள் இவ்வாறான தருணத்தில் வேறு விடயங்களில் தமது ஆர்வத்தினை காட்டுகின்றனர்.

உதாரணமாக இசை, நாடகம், சித்திரம், நடனம், சிற்பம் போன்ற இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுகின்றனர். இப்பருவ மாணவர்கள்

மனஉந்தல்கள், தூக்கமின்மை, பசி, தாகம், பாலியல், விருப்புக்கள், பாசம், ஆசை போன்ற உடல் உளத் தேவைகள் மாணவர்களின் கற்றலில் தாக்கத்தினை விளைவிப்பதனை உடனடியாகக் காணமுடியாவிட்டாலும் காலப்போக்கில் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இவை எல்லாவற்றிலும் காதல், பாலியல் என்பன அதிகம் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற காரணியாகக் காணமுடிகிறது. இவையே பாடசாலையில் அதிகளவு ஏற்படக்கூடியது ஏனெனில் அதிகளவு உணர்வுகளை தூண்டி மனவெழுச்சி செயற்பாட்டை ஏற்படுத்தக் கூடிய காரணியாகும்.

எனவே மாணவர்களின் அதிகளவான உடல், உள, மனவெழுச்சி வளர்ச்சியானது இந்தக் கட்டிளமைப்பருவத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. மாணவர்கள் இப்பருவத்தின் சிக்கலான மனவெழுச்சிப் பண்புகளை வெளிக்காட்டுவதற்கு சமூகக் கட்டுப்பாடு, சமயக் கட்டுப்பாடு என்பன தடையாக அமைகின்றது. இதனை எதிர்க்க முயலும் போது தாம் வேறு விதமான உள முரண்பாட்டிற்கு ஆளாக்குகின்றன. இதனை இனம் கண்டு நிவர்த்தி செய்யாவிடின் மாணவர்கள் பிற்காலத்தில் முரட்டுத்தனம் கொண்டவர்களாக மாறக்கூடும். இதனால் கற்றலானது பாதிப்படைகிறது. அல்லது தாக்கத்திற்கு உள்ளாகிறது. மனவெழுச்சியினை கட்டுப்படுத்தி வழிப்படுத்த வேண்டியது ஆசிரியரின் கற்பித்தல் நுட்பமாகும் என்பதை எடுத்தியம்புவதாக மனவெழுச்சி வெளிப்பாடு மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் எனும் இவ்வாய்வு கல்குடா கல்வி வலய பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களிலுள்ள மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.3 ஆய்வு நோக்கங்கள்

- ❖ சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களிலுள்ள மாணவர்களின் மனவெழுச்சி பண்புகளைக் கண்டறிதல்.
- ❖ மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் கற்றலில் எவ்வாறு தாக்கத்தினைச் செலுத்துகின்றது என்பதைக் கண்டறிதல்.
- ❖ மனவெழுச்சி வெளிப்பாட்டுப் பிரச்சனைகளைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளை எடுத்துக்காட்டல்.

### 1.4 ஆய்வு முறையியல்

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது தற்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை அளிக்கும் விமர்சன ரீதியான முறையாக அமைவதால் விபரண ஆய்வு முறையாகவே உள்ளது.

**1.4.2 தரவு சேகரிப்பு முறைகள்:** இவ் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், அவதானித்தல், ஆவணங்கள் என்பன பயன்படுத்திப் பெறப்பட்டுள்ளன.

**1.4.3 மாதிரித் தெரிவு:** பெருந்தொகை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அதிலிருந்து வரையறுத்து தெரிவு செய்து அம்மக்களின் பிரதிநிதிகளைப் பயன்படுத்தி அவர்களைக் கொண்டு ஆய்வு செய்து ஆய்வுக் கருத்துக்களை அறிதலே மாதிரி எடுத்தல் எனப்படும். அந்த அடிப்படையில் இவ்வாய்விற்காக எளிய எழுமாற்று மாதிரியெடுத்தல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ் ஆய்விற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயத்திலுள்ள 1AB பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.5 பாடசாலைகளின் முழு விபரம்

| இல | பாடசாலையின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை | சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | மட்.∴கல்.∴வாழைச்சேனை இந்துக்கல்லூரி | 1576 | 69 | 533 | 40 |
| 02 | மட்.∴கல்.∴பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் | 663 | 38 | 770 | 30 |
| 03 | மட்.∴கல்.∴செங்கலடி மத்திய கல்லூரி | 2251 | 98 | 572 | 59 |
| 04 | மட்.∴கல்.∴வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம | 1994 | 82 | 1262 | 50 |
| 05 | மட்.∴கல்.∴வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம் | 1660 | 72 | 1047 | 48 |

**அட்டவணை 1** (மூலம்: கல்குடா வலயக் கல்வித் திணைக்களம்)

கல்குடா கல்வி வலயத்தில் மொத்தமாக 83 பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆய்வு நோக்கத்தின் அடிப்படையிலும் ஆய்வினைச் சரியான முறையில் செய்வதனைக் கருத்திற் கொண்டும் கல்குடா வலயத்திலுள்ள 1AB பாடசாலைகள் ஐந்து மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இப்பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்கள் (தரம் 9-13) வரையான தரங்களில் உள்ள மாணவர்களுள் ஒரு பாடசாலைக்கு 50 மாணவர்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக 250 மாணவர்களும் ஆசிரியர்களுள் ஒரு பாடசாலைக்கு 30 ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் 150 ஆசிரியர்களும் 50 பெற்றோரும் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பெறப்பட்ட முடிவுகள் முழுப் பாடசாலைகளுக்கும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.6 கண்டுபிடிப்புக்களும் ஆலோசனைகளும்

#### 1.6.1 கண்டுபிடிப்புக்கள்

- சிரேஷ்ட இடைநிலை மாணவர்களிடம் கோபம், பதட்டம், பதகளிப்பு, பொறாமை, சண்டை, பலிதீர்க்கும் உணர்வு, முரண் உணர்வு, பாலுணர்வு போன்ற எதிரான மனவெழுச்சிகள் காணப்படுவதுடன் அவை கற்றலையும் பாதிக்கின்றன.

- ❖ ஆசிரியர்களின் பொருத்தமற்ற கற்பித்தல் செயற்பாடுகளால் சில மாணவர்கள் எதிரான மனவெழுச்சி வெளிப்பாடுகளைக் காட்டுவதால் குறித்த ஆசிரியர்களின் மீதும் அவர் கற்பிக்கும் பாடத்தின் மீதும் விருப்பின்றிக் காணப்படுகின்றனர்.
- ❖ சிரேஷ்ட, இடைநிலை வகுப்புக்களிலுள்ள மாணவர்கள் கட்டிளமைப்பருவத்தினராவர். இவர்களிடத்தே மனவெழுச்சி கட்டுப்பாடுகளை மேற்கொள்வது என்பது முடியாத காரியம். எது சரி, எது தவறு என்பதை சிந்தித்து செயற்பட முடியாத பருவமாகும்.
- ❖ இப்பருவத்தினரிடத்தே தோன்றும் மனவெழுச்சி வெளிப்பாடுகள் நேரடியாக மாணவர்களின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
- ❖ பாடசாலைச் சமூகத்தின் இறுக்கமான ஒழுக்கக் கட்டுப்பாடுகள், ஆசிரியர்களின் கற்பித்தல் கடினத்தன்மை என்பன மாணவர்களிடத்தே பொருத்தமற்ற மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதற்கு தூண்டிகளாக அமைகின்றன.
- ❖ பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் தொடர்பாக பூரண அறிவு காணப்பட்ட போதிலும் அதனைக் கற்றல் கற்பித்தலில் பிரயோகிப்பது குவைாகக் காணப்படுகின்றது.
- ❖ வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல் என்பனவற்றை தமது விருப்புக்களை நிறைவேற்றுவதற்கு தடையாக அமையும் காரணிகளாகக் கருதுகின்றனர்.
- ❖ பொருத்தமற்ற மனவெழுச்சி வெளிப்பாடுகளினால் இளவயதுத் திருமணம், இடைவிலகல், கொலை, கொள்ளைச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.
- ❖ மாணவர்கள் எதிர்பார்க்கும் கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளாமையினால் கோபம், சண்டை, பொறாமை, கீழ்படியாமை போன்ற எதிர்மறையான மனவெழுச்சி வெளிப்பாடுகளை வெளிப்படுத்துகின்றனர்.
- ❖ மாணவர்கள் எதிர்பார்க்கும் அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பன பெற்றோர், ஆசிரியர்களிடம் கிடைக்காமை.
- ❖ பெற்றோருக்கு பிள்ளைகளின் கற்றலில் ஆர்வம் இன்மை.
- ❖ சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் அடைவு மட்டங்கள் குறைவாக காணப்படுகின்றமை.
- ❖ மாணவர்களிடையே ஒற்றுமையின்மை.
- ❖ பாடசாலைகளில் மாணவர்களின் மனவெழுச்சிச் சிக்கல்களை தீர்ப்பதற்கு தேவையான வளங்கள் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் இத்தகைய நிதழ்வுகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதில் பெற்றோர் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர்.

### 1.6.2 ஆலோசனைகள்

- ❖ கற்றல் கற்பித்தல் விடயம் நடைபெற வேண்டுமாயின் சீரற்ற மவெழுச்சிகள் குறைக்கப்பட்டு கற்றலுக்கு சாதகமான மனநிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் மாணவர்கள் எதிர்பார்க்கும் நவீன முறையிலான கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.
- ❖ ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வி உளவியல் தொடர்பான அறிவினை வலுப்படுத்தி அதனைக் கற்பித்தலில் முழுமையாகப் பயன்படுத்துகின்றனரா என்பதை மேற்பார்வை செய்தல் வேண்டும். இதன்மூலம் வகுப்பறையில் கற்றலுக்குப் பொருத்தமற்ற மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் மாணவர்களை நல்வழிப்படுத்த முடியும்.
- ❖ பொருத்தமற்ற மனவெழுச்சி நடத்தைகளை வெளிப்படுத்தும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான வழிகாட்டல் ஆலாசனைகளை

வழங்குவதற்குத் தேவையான நேரத்தை ஆசிரியர்களும் அதிபர்களும் தமது வேலைத்திட்டத்தில் ஒதுக்குதல் வேண்டும்.

- ❖ பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஒழுக்கக்கல்வி, விழுமியக்கல்வி என்பவற்றிற்கு கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.
- ❖ ஆசிரியர்- மாணவர் தொடர்பு நட்புறவு மிக்கதாக இருத்தல் வேண்டும். கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது பொருத்தமான மீறவலியுறுத்தல்களை பொருத்தமான இடங்களில் வழங்குதல் வேண்டும்.
- ❖ ஆதிபர், ஆசிரியர்கள் பெற்றோருடன் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் இடைவிலகல், வரவின்மை என்பவற்றைத் தடுக்க முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அருள்மொழி.செ, 2010, ***பிள்ளை வளர்ச்சியும் கற்றலும்***, றோயல் அச்சகம், பிரதான வீதி, சாய்ந்தமருது.
2. கருணாநிதி.மா,2008, ***கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்***, சேமமடு பதிப்பகம், கொழும்பு 13
3. ஜெயராசா சபா, 2008, ***சீர்மிய உளவியல்***, சேமமடு பதிப்பகம், கொழும்பு 13
4. ஜெயராசா சபா, 2005, ***குழந்தை உளவியலும் கல்வியும்***, சேமமடு பதிப்பகம், கொழும்பு 13
5. தனராஜ்.தை, மே 2006, ***மனவெழுச்சிசார் நுண்ணறிவும் ஆசிரியர்களும்***, அகவிழி, ரொக்னோ பிரின்ட்,கொழும்பு 07
6. லோகேஸ்வரன். ஆர் மே 2006, ***மாணவரின் மனவெழுச்சியை ஒழுங்கமைப்பதில் ஆசிரியரின் பங்கு***, அகவிழி, ரொக்னோ பிரின்ட்,கொழும்பு 07
7. Eckman.P, 1999**, *Basic Emotions, Handbook of Cognition and Emotion***, PP 45-60, New York , John wiley and Sons Ltd.
8. Mayer.J.D, and Cobb.C.D, 2000, ***Educational Policy on Emotional Intelligence***, Educational Review 12, 163-183